**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No. 172/2019**

பெயர் : ஆசிர்வாதம் (DW1) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

நாள் – 02.04.2025

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. தாவா சொத்து இருக்கும் சிறைக்குளம் எனது பூர்விக ஊர். வழக்கின் வாதிக்கும் சிறைக்குளம்தான் பூர்விக ஊர். வாதியும், நானும் வெவ்வேறு வகையறாக்கள்.

2. வாதி கிழவன் வகையறாவைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். கிழவனுக்கு துாங்கன் மற்றும் விரதை என்ற இரண்டு ஆண் வாரிசுகள் மட்டும். பெண் வாரிசுகள் பற்றி எனக்கு தெரியாது. துாங்கன்தான் மூத்தவர்.

3. வழக்குச் சொத்து கிழவன் வழிவந்த சொத்து என்றால் சரிதான். கிழவனுக்கு பின் வழக்குச் சொத்து துாங்கனுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது.

4. கிழவன் உயிருடன் இருந்த காலத்தில் அவருடைய சொத்துக்களை அவருடைய வாரிசுகளான துாங்கன் மற்றும் விரதை ஆகியோருக்கு வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. அந்த காலகட்டத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை மூலம் துாங்கன் மற்றும் விரதை கிழவனின் சொத்துக்களை அனுபவம் செய்தது எனக்கு தெரியும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த வகையில்தான் தாவா சொத்து வாதியின் தாத்தா விரதைக்கு

பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6. விரதைக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று சொன்னால் சரிதான். மூத்த மனைவி பெயர் தெரியாது. இளைய மனைவி பெயர் மாரத்தாள்.

7. வாதியின் தாயாரான அன்னமரியாள் மற்றும் பொன்னம்மாள் விரதையின் மூத்த மனைவியின் வாரிசுகள் என்றால் சரிதான். இரண்டாவது மனைவி மாரத்தாளுக்கு 3 வாரிசுகள்.

8. விரதையின் மூத்த மனைவி இறந்தபிறகுதான் 2 வது மனைவியை திருமணம் செய்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியும். தாவா சொத்தின் கிழக்கு பக்கம் – அர்சுணன்நாயக்கர் வகையறா, வடக்கில் – அர்சுணன்நாயக்கர் வகையறா, மேற்கில் – துரைராஜ் வகையறா மற்றும் கன்னிச்சாமி வகையறா, தெற்கில் – செல்வராஜ் வகையறாவின் சொத்துக்கள் உள்ளது. தெற்கு பக்கம் உள்ள செல்வராஜ் என்பவர் வழக்கின் வாதியா என்றால் இல்லை.

10. தாவா சொத்திற்கு அருகில் வாதியின் தாயார் அன்னமரியாள் பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் மேற்கு பக்கம் உள்ள துரைராஜ் வகையறாவின் சொத்துக்களுடன் கூட்டாக உள்ளது.

11. தாவா சொத்து உட்பட தூங்கன் பெயரில் உள்ள பழைய பட்டா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதில் பிரிவினை ஆகாமல் சர்வே எண்.111/2 ல் இருக்கும் என்றால் சரிதான்.

12. தாவா சொத்து உட்பட மொத்த சொத்தின் விஸ்தீரணம் 6.44 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான்.

13. தூங்கனின் முதல் மனைவி பெயர் இராஜாமணி என்றால் சரிதான். விரதைக்கு 2 வது திருமணம் செய்வதற்கு முன்னால் முதல் மனைவியின்

வாரிசுகளான அன்னமரியாளுக்கும், பொன்னம்மாளுக்கும் தாவா சொத்தை ஒதுக்கி கொடுத்த பின்னர்தான் 2 வது திருமணம் செய்தார் என்றால் சரியல்ல.

14. கிழவனின் மூத்த வாரிசு தூங்கன் என்பதால் ஆவணங்கள் அனைத்தும் தூங்கன் பெயரில் இருந்து வந்தது என்றால் சரியல்ல. வாய்மொழி பாகப்பிரிவினைபடி சொத்துக்களை விரதன் அனுபவம் செய்து வந்தார் என்றாலும் சரியல்ல.

15. வழக்கிற்காக தூங்கன் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. விரதன் என்பவர் தூங்கன் பெயரில் உள்ள சொத்துக்களை அனுபவம் செய்து வந்தார் என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

16. UDR, அ–பதிவேடு எல்லாம் 2014 ம் ஆண்டிற்கு முன் அன்னமரியாள் பெயரில் மோசடியாக இருந்தது. 2014 ம் ஆண்டிற்கு பின் தற்போது வரை என் பெயரில் ஆவணங்கள் தாக்கலாகி வருகிறது.

17. வாதியின் தாயார் அன்னமரியாள் 2014 ம் ஆண்டு இறந்து விட்டார். வழக்கின் 1 ம் பிரதிவாதி கிரேஸ் என்பவரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினேன். கிரேஸ் தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கான எந்த ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை. கிரேஸின் தாத்தா பெயரில் உள்ள ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

18. தூங்கனின் வாரிசு பாக்கியத்தம்மாள் என்றால் சரிதான். பாக்கியத்தம்மாள் வாரிசுதான் கிரேஸ். பாக்கியத்தம்மாள் தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. பாக்கியத்தம்மாள் இறப்பதற்கு முன் எங்கள் ஊரில் குடியிருந்து வந்தார். கிரேஸ் தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும்போது எங்கள் ஊரில்தான் இருந்தார்.

19. நான் தாவா சொத்தை கிரேஸ் என்பவரிடம் கிரையம் பெறவில்லை என்றும், கிரைய ஆவணத்தில் உள்ள கையொப்பம் கிரேஸினுடையது இல்லை என்றும், UDR பட்டாவில் உள்ள கிழவன் பெயரை பொய்யாக பயன்படுத்தி எனது பெயரில் கிரைய ஆவணத்தை பொய்யாக தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

20. கிரையம் ஏற்பட்ட தேதியில் கிரேஸ் என்பவர் தூத்துக்குடி அருகில் ஏரலில் இருந்தார் என்றும், அந்த சமயத்தில் அவர் என்னுடைய ஊரில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

21. கிரேஸிற்கு 2 பெண் பிள்ளைகள் உள்ளனர். தற்போது அவர்கள் எங்கள் பக்கத்து ஊரில் வசித்து வருகிறார்கள். நான் கிரையம் வாங்கியபோது அவர்கள் மைனர்கள்.

22. நான் கிரையம் வாங்கிய சமயத்தில் கிரேஸின் மூத்த பெண் மேஜர் என்றும், நான் அதை பொய்யாக மறைத்து கிரைய ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

23. தாவா சொத்தை வாதிதான் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தப்பட்ட பயிர் காப்பீடுகள் தற்போது வரை வாதி பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல.

24. வழக்கின் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கணினி பட்டா 2013 ம் ஆண்டில் வாதி பெயரில் தாக்கலாகி இருந்தது என்றால் சரிதான்.

25. வா.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் படி 2010 ம் ஆண்டில் தாவா சொத்திற்கு வாதியின் தாயாரான அன்னமரியாள் பெயரில் உள்ளது என்றால் எந்த சொத்து என்று தெளிவாக தெரியாது. மேற்படி வரி ரசீது அன்னமரியாள் பெயரில் ஏற்பட்டுள்ளது.

26. சர்வே எண்.111/2 க்கான SLR நகலில் கிழவன் மகன் தூங்கன்

மற்றும் வகைறாக்கள் என்று உள்ளது என்றால் சரிதான்.

27. சிறைக்குளம் குரூப் கிராம எண் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு முன் அடங்கலில் கோ.அன்னமரியாள் என்பவர் பெயர்தான் உள்ளது என்றால் சரிதான்.

28. சர்வே எண்.111/2 ஆனது எத்தனை உட்பிரிவுகளாக உள்ளது என்று எனக்கு தெரியாது. RDO கோர்ட்டில் கிரையப்பத்திரம் மூலம் பட்டா மாறுதலுக்காக விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தேன். அதில் எதிர்மனுதாரராக அன்னமரியாளை சேர்த்திருந்தேன். நான் கிரையம் பெறும்போது அன்னமரியாள் பெயரில்தான் சொத்து இருந்தது.

29. நான் கிரையம் வாங்கும்போது கிரேசின் பெயரில் எந்த ஆவணமும் இல்லை என்றால் அன்னமரியாள் பெயரில் இருந்தது, தூங்கன் பெயரில் இருந்தது.

30. RDO கோர்ட்டில் தாக்கல் செய்த விண்ணப்பத்திற்கு எதிர்தரப்பினர் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டார் என்றால் அவரது வழக்கறிஞர் ஆஜரானார். இறுதி முடிவின்போது தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டார்.

31. 2013 ல்தான் RDO கோர்ட்டில் மனுதாக்கல் செய்தேன். 2014 ல் அன்னமரியாள் இறந்துவிட்டார். 2013 ல் மனுதாக்கல் செய்தபோது அன்னமரியாள் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் இல்லை. நல்ல நிலையில்தான் இருந்தார்.

32. வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. RDO கோர்ட்டில் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் கிரைய ஆவணத்தை கடலாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

33. 2016 ம் வருடம்தான் வழக்கின் வாதிக்கு பயிர்காப்பீடு பெற

சென்றபோதுதான் ஆவணங்கள் என்னுடைய பெயரில் இருந்தது தெரிய வந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

34. மோசடி பத்திரத்தின் மூலம் தான் வாதிகளுக்கு தெரியாமல் வருவாய் ஆவணங்கள் என்னுடைய பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல.

35. கிரேசிற்கோ, அவரது வாரிசுகளுக்கோ வழக்கு சொத்து சொந்தமானது அல்ல என்றால் சரியல்ல. கிரைய ஆவண எண்.33/1994 ஆனது பொய்யாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

36. தாவா சொத்தானது விரதைக்கு பாத்தியப்பட்டது என்றும், அதன்பின்னர் அன்னமரியாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், தற்போது செல்வராஜ் என்பவரின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

37. பி.வா.சா.ஆ.2 ஆன சர்வே எண்.111/2 க்கான பட்டா பாஸ்புக் ஆவணமானது தூங்கன் மற்றும் 11 நபர்களுக்கு கூட்டாக உள்ளது என்று சொன்னால் சரிதான்.

38. கிரையப்பத்திரத்திற்கு பின்னிட்டு பி.வா.சா.ஆ.5 ஆன 2016 ம் ஆண்டு கடலாடி வட்டாட்சியர் மூலம் கணிணி பட்டா எனது பெயரில் பொய்யாக ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

39. 1994 ம் ஆண்டு ஏற்பட்ட கிரையப்பத்திரத்திற்கு பின் 2016 ம் ஆண்டு வரை எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் ஊர் பெரியோர் முன்னிலையில் பேசிப்பார்த்தேன், எவ்வித முடிவும் எட்டப்படவில்லை என்பதால் வருவாய் கோட்டாட்சியர் மூலம் பட்டா மாறுதலுக்கு விண்ணப்பித்தேன்.

40. பி.வா.சா.ஆ.1 ஆன நில பதிவேட்டில் சர்வே எண்.111/2 க்கு தூங்கன் மற்றும் பலபேர் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில்

மற்றும் பலர் என்பது தூங்கன் மட்டும் அல்ல. வெவ்வேறு நபர்களை குறிக்கும்.

41. கிரைய ஆவண எண்.33/1994 ல் உள்ள கைரேகையானது கிரேஸினுடையது இல்லை என்றால் சரியல்ல.

42. கிரைய ஆவணத்தில் உள்ள சாட்சிகளை நீதிமன்றத்தில் சாட்சியாக முன்னிறுத்த தயாராக உள்ளேனா என்றால் அதில் ஒருநபர் இறந்துவிட்டார். மற்றொருவர் பேசிக்கொள்ள மாட்டார்.

43. தூங்கன் மற்றும் விரதன் பெயரில் கூட்டாக உள்ள வேறு பட்டா எண்கள்.120/5, 120/8, 117/9 ஆகும். வேறு நிறைய சொத்துக்கள் உள்ளது அதுபற்றி தெரியாது.

44. பி.வா.சா.ஆ.6 ஆவணமானது வருவாய் கோட்டாட்சியர் உத்தரவிற்கு பின்பு பெறப்பட்டது. வழக்கின் வாதி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவிற்கு பின்பு தனது தாயார் ஆஜராகாத காரணத்தை கூறி அந்த உத்தரவிற்கு எதிராக மனுதாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

45. வருவாய் கோட்டாட்சியர் அந்த உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யும்படி வாதியை அறிவுறுத்தினார். மேல்முறையீடு செய்ய காலதாமதம் ஆகும் என்பதால் உரிய நீதிமன்றத்தின் மூலம் தீர்வு பெற வேண்டும் என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)